**தலைப்பு 257 - களுத்துறை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு - 257 களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 12 ஆம் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

மாவட்டச் செயலகத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 1,072.00 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 1,017.74 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மாவட்டச் செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 54.26 மில்லியன் அதாவது 5.06 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு**

| செலவினம் | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 834.00 | 832.62 | 1.38 | 0.17 |
| மூலதனம் | 238.00 | 185.12 | 52.88 | 22.22 |
| மொத்தம் | 1,072.00 | 1,017.74 | 54.26 | **5.06** |

**(ஆ) அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு 26 அமைச்சுக்கள் மற்றும் 15 திணைக்களங்களினால் ரூபா 3,268.52 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 3,126.02 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 142.5 மில்லியன் அதாவது 4 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய 25701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 80.00 | 79.91 | 55.00 | 63.72 | 265.00 | 213.84 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் கீழுள்ள 06 வைப்புக் கணக்குகளுக்குரிய 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 353.28 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0059/000 | 0.89 |
| 6000/0000/00/0002/0077/000 | 20.19 |
| 6000/0000/00/0016/0030/000 | 183.46 |
| 6000/0000/00/0017/0008/000 | 39.74 |
| 6000/0000/00/0018/0037/000 | 97.09 |
| 6000/0000/00/0019/0006/000 | 11.91 |
| மொத்தம் | 353.28 |

**2.5 கணக்காய்வு அவதானிப்பு**

களுத்துறை மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினாலும் அதன் கீழுள்ள சில பிரதேச செயலகங்களினாலும் கிழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) | கணனிகள், உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பிரதேச செயலகங்களினால் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை |
| (iii) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891 | மாவட்ட செயலகத்தினாலும் களுத்துறை பிரதேச செயலகத்தினாலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.2 பொது வைப்புக் கணக்கு**

2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 9,064,783 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

25701 ஆம் விடய இலக்கம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 204,121 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையிலான காலவீச்சில் இருந்த வந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு மாவட்ட செயலகம் தவறியிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

மாவட்டச் செயலகம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஹொரண பிரதேச செயலகத்தின் அதிகாரப் பிரதேசத்தில் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 1,476,706 செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பஹலமில்லவ தெற்கு கிராம செயலாளர் அலுவலகம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஹொரண நகரில் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 6,883,222 செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட அரச ஒசுசல கட்டிடம் நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு இணங்க நிர்மாணிக்கப்படாமையால் வியாபார செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) களுத்துறை மாவட்டத்தில் 1994 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மூடப்பட்ட 46 பாடசாலைகளின் 15 பாடசாலைகளுக்கு உரித்தாக இருந்த 38 ஏக்கர் காணி மற்றும் 15 பாடசாலைக் கட்டிடங்கள் என்பன பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

(iv) தொடங்கொடை பிரதேச செயலக வளவில் ரூபா 4,969,625 தொகை செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த சிற்றுண்டிச்சாலைக் கட்டிடம் 2017 யூன் மாதம் வரையிலும் வியாபார செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.5 நட்டமும் இழப்பும்**

1989 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 04 விடயங்களுக்கு ஏற்பட்டிருந்த ரூபா 2,476,817 கூட்டுத்தொகையான நட்ட இழப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொது நடவடிக்கைகளுக்காக காணியை சுவீகரிப்பதற்கான அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும், ஹொரண பிரதேச செயலாளரினால் 7 காணித் துண்டுகளை சுவீகரிப்பதற்காக உரிய அறிவித்தலை வர்த்தமானியில் பிரசுரித்திருக்கவில்லை. அவ்வாறே அக்காணித்துண்டுகளின் பெறுமதி தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 9,896,915 தொகை இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்தமை.

(ஆ) ஹொரண பிரதேச செயலகத்தினால் மண் வெட்டுவதற்காகவும் போக்குவரத்திற்காகவும் 2016 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரங்களில் ஒரு அனுமதிப்பத்திரத்திலிருந்து 2 கியுப் மண் மாத்திரம் போக்குவரத்து செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு மேற்பட்ட அளவு போக்குவரத்துச் செய்யப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) ஹொரண வாரச்சந்தை 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அபிவிருத்தி செய்யும் போது நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு 24149 கனமீற்றர் மண் வெட்டுவதற்காக ரூபா 22,483,500 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3.7 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 75 | 74 | 4 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 56 | 34 | 22 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 2,423 | 1,965 | 464 | 06 |
| (iv) | ஆரம்ப நிலை | 167 | 146 | 22 | 01 |
| | மொத்தம் | 2,721 | 2,219 | 512 | 10 |

- இரண்டாம் மட்டத்தில் 464 ஊழியர் வெற்றிடங்களுக்கு இடையே 86 பேர் கிராம உத்தியோகத்தர்களினதும் 303 அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகவும் இருந்தனர்.